7 அறிக்கை அளித்தல்.

(அ) மதிப்பீட்டுக் குழு அறிக்கை.

திரு. கா. செங்கோடன் : மாண்புமிகு தலைவரவர்களே, ஆவண பதிவுத் துறைபற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துறைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழுவின் ஐந்தாவது அறிக்கையையும், பாசனத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழுவின் ஆறுவது அறிக்கையையும் அவைமுன் வைக்கிறேன்.

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் அறிக்கை.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : தலைவரவர்களே, அரசினர் உறுதிமொழிக் குழுவின் 1977–78-ஆம் ஆண்டுக்கான இரண்டாவது அறிக்கையை (ஆறுவது சட்டமன்றப் பேரவை) அவை முன் வைக்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை.

திரு. இரா. முத்தையா : பேரவைத் தலைவரவர்களே, 1965–66 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

8 அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே :—

" தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1978) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் "

என்று முன் மொழிகிறேன்.

---

*1978 செப்டம்பர் 11 ஆம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.